புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

No.4/TD/DTC/PA/2013/22 புதுச்சேரி, தேதி: 04.01.2014

## செய்திக் குறிப்பு

**சொந்த உபயோகத்திற்கான வாகனங்களை வாடகைக்கு விடும் நபர்களுக்கு எச்சரிக்கை**

புதுவையில் மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சொந்த உபயோகத்திற்கென பதிவு செய்யப்பட்டு சட்ட விரோதமாக டூரிஸ்ட் டாக்ஸிக்களாகவும், கம்பெனிகளுக்கு மாத வாடகைக்கும் இயக்கப்படுவது தொடர்பாக பலமுறை போக்குவரத்துத் துறையால் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆனால் சொந்த வாகனங்கள் தொடர்ந்து சட்ட விரோதமாக உரிய அனுமதியின்றி போக்குவரத்து வாகனமாக பயன்படுத்தப்படுவது இத்துறையின் கவனத்திற்கு வந்துள்ளது.

சொந்த உபயோகத்திற்கென பதிவு செய்யப்பட்ட (White Board) மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் உரிமையாளர்கள் தமது வாகனங்களை வாடகைக்கு விடுவதும், பொதுமக்களை நாள் மற்றும் மாத வாடகைக்கு ஏற்றிச் செல்வதும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். வாடகைக்கு சொந்த வாகனங்களை பயன்படுத்தாமல் போக்குவரத்துத் துறையை அணுகி அதற்குரிய அனுமதியை (Permit) பெற்றுக்கொள்ள வேண்டும்.

உரிய அனுமதி பெற்ற போக்குவரத்து வாகனங்கள் அனைத்தும் மஞ்சள் நிற நம்பர் பிளேட் பெற்றிருக்கும். உரிய அனுமதி பெறாத வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவது தண்டனைக்குரிய குற்றம் என்பதால் அனுமதி பெற்ற (Yellow Board) வாகனங்களை மட்டுமே பொதுமக்களும் நிறுவனங்களும் வாடகைக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அனுமதியின்றி வானங்களை வாடகைக்கு பயன்படுத்துவோர் உடனடியாக உரிய ஆவணங்களுடன் போக்குவரத்துத் துறையை அணுகி அனுமதி (Permit) பெற்றுக்கொள்வது இன்றியமையாதது. இனியும் தவறு செய்யும் வாகன உரிமையாளர்கள் மீது மோட்டார் வாகனச் சட்ட விதிகளின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அத்தகைய வாகனப் பதிவுகள் ரத்து செய்யப்படும் என்றும் புதுச்சேரி போக்குவரத்துத் துறை தெரிவித்துக்கொள்கிறது.

GOVT. OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்